| தேதி | | | நிகழ்ச்சி நிரல் | |
|---|---|---|---|---|
| தமிழ் | ஆங்கிலம் | கிழமை | காலை | மாலை |
| விசுவாவசு ஆவணி 2 | 18-8-2025 | திங்கள் | காலை 7 மணி அனுக்ஞை ஸ்ரீ விக்னேஸ்வர பூஜை, சங்கல்பம், ஆசார்ய ரித்விக் வர்ணம், மதுபர்கம், கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், வாஸ்து ஸ்ரீ சுக்த ஹோமம் 10.30 பூர்ணாஹூதி, 11.00 மந்த்ர புஷ்பம், மஹா தீபாராதனை | 4.30 ம்ருத்சங்க்ரஹணம், ரக்ஷா பந்தனம், கலாகர்ஷணம் யாகசாலைப் பிரவேசம், வாஸ்து ஹோமம், கலாகர்ஷணம் முதல் கால ஜபம், ஹோமம், ருத்ர த்ரிசதி, 7.30 பூர்ணாஹூதி, 8.00 மஹா தீபாராதனை |
| ஆவணி 3 | 19-8-2025 | செவ்வாய் | 7.00 மணி இரண்டாவது கால யாகசாலை பூஜை, ஜபம், ஹோமம், கன்யா, சுவாஸினி பூஜை 8.30 மும்மூர்த்தி அஷ்டபந்தனம் சாற்றுதல் 10.30 பூர்ணாஹூதி, 11.00 மந்த்ர புஷ்பம், மஹா தீபாராதனை | 4.30 மணி மூன்றாவது கால யாகசாலை பூஜை, ஜபம், ஹோமம், பிம்பசுத்தி புண்யாஹவாசனம், கௌதுக பந்தனம், ஸ்ரீ ரமண சஹஸ்ரநாம, லலிதா ஸஹஸ்ரநாம அர்ச்சனை, 7.30 பூர்ணாஹூதி, 8.00 மஹா தீபாராதனை |
| ஆவணி 4 | 20-8-2025 | புதன் | 6.00 மணி நாலாவது கால யாகசாலை பூஜை, ஜபம், ஹோமம், 9.00 பூர்ணாஹூதி, 9.30 மணி மஹா தீபாராதனை, 10.00 யாத்ரா தானம், 10.15 மணி மஹா கும்பாபிஷேகம் 10.30 மூலமூர்த்திகளுக்கு மஹா அபிஷேகம், 11.00 மஹா தீபாராதனை | ஸ்ரீ ரமணாச்ரமம் திருவண்ணாமலை |



உ

ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய


# மஹா கும்பாபிஷேகப் பத்திரிகை



ஸ்ரீ கணபதி



ஸ்ரீ சுப்ரஹ்மண்யர்



ஸ்ரீ மாத்ருபூதேஸ்வரர்,
ஸ்ரீ ரமணேஸ்வரர்



ஸ்ரீ யோகாம்பிகா



ஸ்ரீ சண்டேஸ்வரர்

*பிள்ளையாப் பெற்றவனைப் பிச்சாண்டி யாக்கியெங்கும்*
*பிள்ளையாப் பேழ்வயிற்றைப் பேணினீர் பிள்ளையான்*
*கன்னெஞ்சோ மாடத்துப் பிள்ளையாரே கண்பாரும்*
*பின்வந்தான் தன்னைநீர் பெற்று.*

*– ஸ்ரீ பகவான்*

*வேதங்களினால் எந்தப் பேரொளி அறிவிக்கப்பட்டதோ, எந்தப் பேரொளி இவ்வகிலம் முழுதும் ஊடுருவி உள்ளதோ, எந்தப் பேரொளி அவள் மைந்தனான குஹரமணனின் கண் பார்வையில் வெளிப்பட்டதோ, அந்தப் பேரொளியாகவே அழகம்மையானாள்.*

*– கணபதி முனி*

*ஞானத்திரளாய் நின்ற பெருமா னல்ல வடியார்மே*
*லூனத்திரளை நீக்கு மதுவு முண்மைப் பொருள்போலு*
*மேனத்திரளோ டினமான் கரடி யிழியு மிரவின்க*
*ணானைத்திரள் வந்தணையுஞ் சார லண்ணா மலையாரே.*

*– ஞானசம்பந்தர்*

*தெளிவில் நீலோற்பல நேயனை நிகர்த்தவனும், ஒளியிற்றாமரை நாயகனும், பிரஹ்ம நிஷ்டையில், ஆலிலின் கீழமர்ந்த அப்பனை நினைவுறுத்துவானும், அலைவற்றவனும் ஆகிய பெருமானை ஸ்மரிக்கிறோம்.*

*– ரமண கீதை அத்.18, பாடல். 13*

அன்புடையீர்,

ஸ்ரீ ரமணாஸ்ரமத்தில் ஸ்ரீ மாத்ருபூதேஸ்வரர் மற்றும் ஸ்ரீ ரமணேஸ்வர மஹா சந்நிதானங்கள் நிரந்தர அனுக்ரஹ விலாசத்துடன் விளங்கி வருகின்றன. ஜாதி, மத, இன பேதங்களைக் கடந்து அனைத்து உயிர்களும் பயன்பெறும் வண்ணம் பகவானது உபதேசங்கள் அமைந்துள்ளது. அவரது வாய்மொழி, மௌனோபதேசத்தையும் தாண்டி, அவரை நினைத்த மாத்திரத்திலேயே காலதேசங்களைக் கடந்து எண்ணற்றோர் பயன்பெற்று வருகின்றனர். இத்தகைய ஞானத்திரளை ஈன்றெடுத்த அன்னை அழகம்மைக்கு தனது திருக்கரத்தால் 1922 ஆம் ஆண்டு முக்தி அளித்தார் பகவான் ரமண மகரிஷிகள். அவ்வன்னையின் அருள் ஒடுக்கத்தின் சந்நிதியாக ஸ்ரீ மாத்ருபூதேஸ்வரர் ஆலயமும் ஸ்ரீ ரமணாஸ்ரமமும் உருவானது. 1950 பகவான் ரமண மகரிஷிகளின் விதேக முக்திக்குப் பிறகு ஸ்ரீ ரமணேஸ்வர மஹாலிங்கமும் ஸ்தாபிக்கப்பட்டது.

ஸ்ரீபகவத் கிருபையால் ஸ்ரீ யோகாம்பாள் சமேத மாத்ருபூதேஸ்வரர் சந்நிதிக்கும் அதை அடுத்துள்ள ஸ்ரீ ரமணேஸ்வர மஹாலிங்க சந்நிதிக்கும் நிகழும் விசுவாவசு வருஷம் ஆவணி மாதம் 4 ஆம் நாள் (20-8-2025) புதன்கிழமை துவாதசி திதி, புனர்பூச நக்ஷத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை உதயாதி நாழிகை 10 நாழிகைக்கு மேல் 12 நாழிகைக்குள் காலை 9.30 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் துலா லக்னத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

பக்தர்கள் யாவரும் விழாவில் கலந்து கொண்டு ஆன்மலாபமடையுமாறு வேண்டிக் கொள்கிறோம்.



*திருவண்ணாமலை 606 603*
*27.06.2025*

வேங்கட. சு. ரமணன்

*தலைவர்*
*ஸ்ரீ ரமணாஸ்ரமம்*